<u>**Deposition of witness**</u>

<u>**(Chapter XXII Code of Criminal Procedure)**</u>

<u>**-----------**</u>

<u>**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**</u>

| | | |
|---|---|---|
| Calender | : | O.S.No.29-2014 |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | <u>வா.சா.1 திருமதி.மகேஸ்வரி  க.பெ.பார்த்தசாரதி</u> |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of  of the 28th  day of August 2023

28.08.2023
O.S.No.29/2014

வா.சா.1 திருமதி.மகேஸ்வரி க.பெ.பார்த்தசாரதி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் **விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. 13.07.2011 தேதியிட்ட கிரய ஆவணம் அசல் அது வா.சா.ஆ**-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.06.2010 தேதியிட்ட ரசிதா என்ற ரசிதாபேகம் எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் அசல் அது வா.சா.ஆ**-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 05.09.1986 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் நகல் (மேற்படி ஆவணம் நகல் என்ற எதிர்தரப்பு ஆட்சேபணையுடன் அது வா.சா.ஆ**-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) சர்வே எண்.562-1 க்கான 01.01.2011 முதல் 26.11.2013 வரையான வில்லங்க சான்றிதழ் அது வா.சா.ஆ**-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கான சிட்டா அது வா.சா.ஆ**-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கு நான் செலுத்திய கிஸ்தி ரசிது அது வா.சா.ஆ**-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கு எனது பெயரில் உள்ள சிட்டா அது வா.சா.ஆ**-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கான புல வரைபடம் சான்றிட்ட நகல் அது வா.சா.ஆ**-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.05.2018 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ**-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.